C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்



# மன்னா..

கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

- செப்பனியா: *3: 15*

பொழிவு : 15 JANUARY '2023 ஆகாரம் : 01



*The Lord has taken away your judgments, he has cast out your enemy, The King of Israel, the Lord, is in your midst; you shall see disaster no more*

*- Zephaniah: 3:15*

# C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

## தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

"BUT CONCERNING THAT DAY OR THAT HOUR, NO ONE KNOWS. NOT EVEN THE ANGELS IN HEAVEN, NOR THE SON, BUT ONLY THE FATHER MARK 13:32

# 2023

# Church Program Schedule

*(Tentative)*

| | |
|---|---|
| JANUARY-07 | COVENANT SERVICE |
| JANUARY-08 | SPORTS MEET-2023 |
| JANUARY-14 | CBS -START DATE/ TERM-I |
| FEBRUARY-05 | CHURCH PICNIC-2023 |
| FEBRUARY-22 | ASH WEDNESDAY SERVICE |
| | 40 DAYS- LENT DAILY SERVICE |
| MARCH-04 | MISSION SATURDAY |
| MARCH-11 | WOMEN'S FELLOWSHIP SPECIAL SERVICE-2023 |
| MARCH-25 | PASSION SING SONG SERVICE-2023 |
| MARCH-26 | VACATION BIBLE SCHOOL-2023 ( VBS) |
| APRIL-02 | PALM SUNDAY SERVICE-2023 |
| APRIL-07 | GOOD FRIDAY |
| APRIL-09 | EASTER SERVICE |
| APRIL-22 | 14TH CHURCH DAY |
| APRIL-29 | ANNUAL GENERAL BODY MEETING- 2023 |
| MAY-06 | BIBLE QUIZ CONTEST/ ADULTS |
| JUNE-03 | CBS 1ST TERM EXAM |
| JUNE-10 | CBS-SPECIAL SERVICE-20∏23 |
| AUGUST-12 | YOUTH FELLOWSHIP SERVICE-2023 |
| SEPTEMBER-02 | CBS- RE-OPEN/ TERM-2 |
| SEPTEMBER-09 | CHAMPIONS FOR CHRIST-2023 CBS EVENT |
| NOVEMBER-05 | HARVEST FESTIVAL-2023. OR (NOV-05) |
| NOVEMBER-25 | MEN'S FELLOWSHIP SPECIAL SERVICE-2023 |
| NOVEMBER-25 | CBS 2ND TERM EXAM |
| DECEMBER-02 | CBS- CHRISTMAS PROGRAMS |
| DECEMBER-09 | CHRISTMAS CAROL SERVICE-2023 |
| DECEMBER-11 | CAROL ROUNDS |
| DECEMBER-16 | FAMILY SING SONG SERVICE |
| DECEMBER-23 | CHRISTMAS TREE |
| DECEMBER-25 | CHRISTMAS SERVICE-2023 |
| DECEMBER-31 | 12-HRS CHAIN PRAYER |
| DECEMBER-31 | YEAR END-2023/ NEW YEAR-2024 SERVICE |

### January

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### February

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | | | | |

### March

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

### April

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

### May

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

### June

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | |

### July

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | 31 | | | | | |

### August

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 |
| 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 |
| 20 | 21 | 22 | 23 | 24 | 25 | 26 |
| 27 | 28 | 29 | 30 | | | |

### September

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

### October

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

### November

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | | |

### December

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |
| 31 | | | | | | |

# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே!

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் திருச்சபை குடும்பத்தார் அனைவருக்கும் புதிய ஆண்டு –2023 நல்வாழ்த்துக்கள்! ஸ்தோத்ரம்!!

> " நான் உனக்கு எனக்கு நடுவாக என் உடன்படிக்கையை ஏற்படுத்தி, உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப் பண்ணுவேன் என்றார்"
>
> –ஆதியாகமம்: 17:2
>
> *'And I will make My covenant between Me and you, and will multiply you exceedingly'*
>
> - Genesis:17:2

கடவுள் ஆபிரகாமுக்கு தரிசனமாகி நான் சர்வவல்லமையுள்ளவர் எனக்கு முன்பாக உத்தமனாக நடந்து கொள்ள வேண்டும் என்று அழைத்து ஆபிரகாமுடன் ஒரு உடன்படிக்கை ஏற்படுத்துகிறார். அந்த உடன்படிக்கையின் வழியாக ஆபிரகாமுக்கு வாக்குறுதி கொடுக்கிறார் அது "உன்னை மிகவும் திரளாய்ப் பெருகப் பண்ணுவேன்". என்று. இன்றைக்கு நாமும் ஆண்டவருக்கு பிரியமாய் உத்தமர்களாய் நடந்துக் கொள்ளும் பொழுது நம்மையும் திரளாய் பெருகப் பண்ணுவார். இந்த வாழ்வை பெற்றுக் கொள்ள நம்மை இந்த புதிய ஆண்டிலே அற்பணிக்க அழைக்கப்படுகிறோம்

கடந்த மாதம் முழுவதும் நடைபெற்ற கிறிஸ்து பிறப்பின் சிறப்பு ஆராதனைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் அனைத்து மிகவும் சிறப்பாக நடைபெற ஆண்டவர் அளித்த கிருபைகளுக்கா உள்ளத்தின் ஆழத்தில் இருந்து உங்களுடன் இணைந்து

ஆண்டவரை துதிக்கிறேன். எல்லா ஆராதனைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகள் அனைத்திலும் மிகவும் உற்சாகமாக பங்கு பெற்ற திருச்சபையின் குடும்பத்தினர் மற்றும் திருச்சபையின் பொறுப்பாளர்கள், பொறுப்புகளை ஏற்று மிகவும் சிறப்பாக செயல்பட்டு ஆண்டவரின் ஊழியத்தில் தங்களை இணைத்துக் கொண்ட அணைவரும் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஆண்டவர் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக. தொடர்ந்து இந்த புதிய ஆண்டிலே நடைபெறும் அனைத்து ஆராதனைகள் மற்றும் சிறப்பு நிகழ்வுகளில் ஜெபத்துடன் உற்சாகமாக பங்கு பெறுமாறும். தொடர்ந்து உங்களின் பங்களிப்பை அளித்து திருச்சபையின் வளர்ச்சி பணியில் உங்களை இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்

## குடும்ப ஜெபகூடுகை (COTTAGE PRAYER METTING)

இந்த புதிய ஆண்டு —2023 — ஜனவரி மாதம் முதல் நமது திருச்சபையின் குடும்பங்களில் குடும்ப ஜெபம் நடத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. எனவே ஒவ்வொரு வாரமும் புதன்கிழமை மாலை.7.30 மணிக்கு குடும்ப ஜெபம் நடைபெறும். திருச்சபையின் குடும்பத்தார் உங்கள் வீட்டில் நடத்துவதற்கு முன்கூட்டியே தெரிவிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். தொடர்ந்து இந்த காலங்களில் நமது வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபைகளுக்காக, ஊழியர்களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலைவாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்களின் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கபடுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இந்த புதிய ஆண்டு —2023 புதிய தரிசனங்களுடன் எதிர்நோக்கவும், புதிய நண்மைகள், புதிய ஆசிர்வாதம் பெற்றுக்கொள்ள ஆண்டவர் நமக்கு துணை செய்வாராக

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

Rev.S.D.Baskar

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்

# உடன்படிக்கை: கடவுளின் கிருபையின் தொடர் செயல்பாடு...

- செப்பனியா: 3:14-20

கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்.

- செப்பனியா: 3: 15

*The LORD has taken away your judgments, he has cast out your enemy, The King of Israel, the LORD, is in your midst; you shall see disaster no more.*

*- Zephaniah: 3:15*

## முன்னுரை:

உடன்படிக்கை என்பது புதிய உறவிற்கான சிந்தனை மற்றும் அடையாளம் ஆகும்.உடன்படிக்கை (அ) உறவு என்பதற்கு எபிரேய மொழியில் "பெரித்" என்ற வார்த்தை பயன்படுத்தப்படுகிறது. (ஆதியாகமம்:17:1-8) இதற்கு இனக்கம், உறவு, உடன்படிக்கை என்று பொருள் கொள்ளப்படுகிறது. மனிதர்கள் நிலைமாறினாலும், தடுமாறினாலும் ஆண்டவர் உடன்படிக்கையில் மாறாதவர். இங்கு செப்பனியா: 3:14-20 இந்த பகுதியில் பார்க்கும் போது இஸ்ரயேல் மக்களுடன் ஆண்டவர் உடன்படிக்கை செய்தார். இந்த உடன்படிக்கையில் ஆண்டவர் இஸ்ரயேல் மக்களுடன் கொண்ட நிபந்தனை என்னவென்றால் நீங்கள் தூயவர்களாக (அ) பரிசுத்தமாக, உண்மை (அ) நீதி இவற்றில் தறித்து இருக்கவேண்டும் என்று ஆண்டவர் விரும்புகிறார். ஆனால் இஸ்ரயேல் மக்கள் இதில் நிலைத்திருக்கவில்லை. இதனால் கடவுள் ஏற்படுத்தின உடன்படிக்கையை முறித்து போட்டார்கள். இதனால் இஸ்ரயேல் மக்கள் தங்கள் அடையாளத்தை இழந்து போனார்கள், இறைச்சாயலை இழந்து போனார்கள். ஆனால் கடவுள் அவர்களை அழிக்காமல்

அவர்கள் மீது அன்பும், இரக்கமும் கொண்டு ஒரு புதிய உடன்படிக்கையை ஏற்படுத்தினார். இந்த உடன்படிக்கை தான்.

"நான் அவர்களின் கடவுளாய் இருப்பேன்; அவர்கள் என் மக்களாய் இருப்பார்கள்" இது இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடையாளம் ஆகும்.

## 1.புதிய உடன்படிக்கை – வாழ்வின் அடையாளம்

NEW COVENANT - SIGN OF LIFE. –செப்பனியா: 3:14,15

இங்கு பார்க்கும் போது இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் புதிய அடையாளத்தை காணமுடிகிறது. இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் பாவமும் அதில் காணப்படும் மீட்பும் குறித்து காணலாம்.இந்த மீட்பின் வழியாக இஸ்ரயேல் மக்களின் புதிய வாழ்வை ஆண்டவர் அளிக்கின்றார். வாழ்வு என்பது கடவுளின் அருட்கொடையாகும். இந்த வாழ்வை மக்கள் தங்களின் பாவமான வாழ்வின் மூலமாக அல்லது மீறுதல் மூலமாக இழந்து போகும்போது ஆண்டவர் தம்முடைய கிருபையினால், இரக்கத்தினால், அன்பினால் புது வாழ்வை அளிக்கின்றார்.

"கர்த்தர் உன் ஆக்கினைகளை அகற்றி, உன் சத்துருக்களை விலக்கினார்; இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்" (செப்பனியா: 3: 15)

இது கடவுளின் இரக்கத்தை காண்பிக்கின்றது இது வாழ்வளிக்கும் உடன்படிக்கை ஆகும்.

## 2. புதிய உடன்படிக்கை – நம்பிக்கையின் அடையாளம்

NEW COVENANT - SIGN OF THE HOPE – செப்பனியா: 3: 16,17,18

இங்கு கடவுள் இஸ்ரயேல் மக்களின் வாழ்வின் இருந்த தீய செயல்களை மன்னித்து அவர்களின் பாவங்களை நினைவுகூறாமல் அவர்களுக்கு அளிக்கும் புதிய வாழ்வை .குறித்து பார்க்கமுடிகிறது. (எரேமியா:31:34) செப்பனியா-3:16,17,18 -இல் காணும்போது "சீயோனைப் பார்த்து, உன் கைகளைத் தளரவிடாதே என்றும்...
உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்.

- அவர் வல்லமையுள்ளவர்
- அவர் இரட்சிப்பார்
- அவர் உன்னை மகிழ்விப்பார்
- அவர் உனக்கு புதிய வாழ்வை கொடுப்பார்
- அவர் உன்னை துன்பத்தில் இருந்து மீட்பார்

இது கடவுளின் வார்த்தையின் மூலமாக நம்பிக்கையற்ற நிலையில் இருப்பவர்களுக்கு நம்பிக்கை கொடுக்கிறது. இது ஆண்டவர் அளிக்கும் புதிய வாழ்வின் அடையாளம் ஆகும்.

## புதிய உடன்படிக்கை – கொண்டாட்டத்தின் அடையாளம்

## NEW COVENANT - SIGN OF CELEBRATION

– செப்பனியா:3:29,20

உடன்படிக்கையின் வாழ்வு என்பது கொண்டாட்டத்தின் அடையாளம் ஆகும். இந்த அடையாளம் வாழ்வு சார்ந்தவையாகும் இதை ஆண்டவர் அளிக்கின்றார்.

- சிறுமைப் படுத்த பட்டவர்களை ஒன்று சேர்கிறார்
- சிறுமைப்படுத்தபட்டவர்களின் பெயரை உலகமெங்கும் புகழ்சியாக்குகிறார்
- அவர்களை தங்கள் சொந்த தேசத்திற்கு அழைத்து வருகிறார்
- அவர்களுக்கு உயர்வும், புகழும், பெயரும் பெருகபண்ணுகிறார்.

கடவுள் இப்படி பட்ட வாழ்வை உடன்படிக்கை வழியாக கொடுத்ததினால் இது கொண்டாட்டத்தின் அடையாளமாகும்

## நிறைவாக

இஸ்ரயேல் மக்களின் வாழ்வில் புதிய உடன்படிக்கையின் வழியாக அவர்களுக்கு அளிக்கப்பட்ட வாழ்வின் அடையாளங்களை குறித்து இந்த திருமறை வழியாக புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். இன்றைக்கு இந்த புதிய ஆண்டுக்குள்ளாக கடந்து வருவதற்கு ஆண்டவர் அளித்திருக்கின்றா புதிய வாழ்வுக்காகவும் நன்றி செலுத்தவும். இந்த புதிய ஆண்டிலே ஆண்டவர் நம்மோடு ஏற்படுத்துகிறா புதிய உடன்படிக்கையின் அடையாளத்தைப் பெற்று ஆண்டவருக்குள் நிலைத்து

இருக்கவும். நம்முடைய விசுவாச வாழ்வில் ஆண்டவருடன் இணைந்து வாழவும். நம்மை அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம். இந்த புதிய ஆண்டிலே ஆண்டவருடைய கிருபையும், சமாதானமும் நம் அனைவரோடும் நமது திருச்சபையின் வாழ்வோடும் நிலைத்திருப்பாராக!

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்

Rev.S.P.Baskar





# ரூத் – RUTH

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரால் உங்கள் அனைவருக்கும் புதிய ஆண்டு—2022 வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக"**

– ரூத்: 2:12

*“May the Lord repay you for what you have done”*

- *Ruth:2:12*

## முன்னுரை:

ரூத் ஒரு மோவாபிய பெண். அவரது கணவர் போவாஸ். அவரது மாமனார் எலிமலேக்கு, மாமியார் நகோமி. தன்னுடைய கணவர் மற்றும் தன் இரண்டு பிள்ளைகளும் இறந்தபின் நகோமி தனித்து விடப்பட்ட சூழலில் தன் இரண்டு மருமக்களாகிய ஓர்பாள் மற்றும் ரூத்தை அவர்களது தாய் வீட்டிற்கு திரும்பிச் செல்லுமாறு கேட்டுக்கொள்கிறாள். ஓர்பாள் தன் மாமியாரின் ஆலோசனைப்படி தன் தாய் வீட்டிற்குச் சென்று விட, ரூத் மாத்திரம் விடாப்பிடியாக தன் மாமியாரன நகோமியுடன் பெத்லகேமுக்குத் திரும்புகிறாள். பெத்லகேமில், ரூத்தின் வாழ்வையும், பின்னணியத்தையும், அவள் தன் மாமியாரான நகோமிக்குப் பாராட்டின தயவையும் கேட்டு, கண்டு, உணர்ந்த போவாசின் சாட்சியின் வாக்குதான் "உன் செய்கைக்குத் தக்க பலனை கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக." (ரூத்:2:12)

## ரூத்தின் அன்பின் செயல்:

ஒரே குடும்பத்தில் மூன்று கைம்பெண்கள் ( விதவைகள்) வாழவேண்டிய நிர்பந்தமான சூழலில், யார் யாருக்கு ஆதரவு கூறுவது என்ற அமைதியற்ற சூழலில் தன் மாமியாரை, தன்னைப் பெற்ற தாயைப்போல் பார்த்து அன்பு காட்டி அரவணைத்தார், சொத்துக்களும், செல்வங்களும் கொடுக்க இயலாத மகிழ்ச்சியையும், சமாதானத்தையும் தன் அன்பின் நற்செயல்களினால் வெளிப்படுத்திக்கொண்டே இருந்தார் ரூத்.எதிர்காலத்தில் தன் செயல்கள் நினைவு கூறப்படும்

என்றோ அல்லது பிறருடைய பாராட்டுகளைப் பெறவேண்டும் என்றோ செயல்பட்ட அன்பு அல்ல, மாறாக அது ரூத்தின் இயல்பான குணநலனாகவே திருமறை நமக்கு வெளிப்படுத்திக் காட்டுகிறது

## ரூத் வெளிப்படுத்தும் ஆன்மீகம் சார்ந்த செயல்:

மோவாபியப் பெண்ணான ரூத், பிறந்தது முதல் மோவாபிய சமய, பண்பாட்டு, கலாச்சார பின்னணியத்திலே வளர்க்கப்பட்டவர். திருமண வாழ்விற்குப் பிறகே யூத குடும்ப பாரம்பரியத்தைக் குறித்து அறிந்து கொள்ளத் துவங்குகிறார். தன் குடும்ப உறவுகளின் இழப்புக்குப் பின்னர் ரூத்தின் சமய வாழ்வில் பெரிய மாற்றம் ஏற்படுகின்றது. இதுவரை தான் வழிபட்ட மோவாபியக் கடவுள் மற்றும் சமயம் சார்ந்த அனைத்து நம்பிக்கைகளையும் புறந்தள்ளிவிட்டு, இஸ்ராயேலரின் முழுமுதற் கடவுளான "யெகோவாவை" தன் சொந்த தெய்வமாக முழுமனதுடன் ஏற்றுக்கொண்ட ரூத்தின் செயல்பாடு. அவரது சமயம் சார்ந்த தன்மை மாற்றத்தை (TRANSFORMATION IN SPIRITUALITY) வெளிப்படுத்துகிறது.இதன் தொடர்ச்சியாக போவாஸ் அவரது பண்பு நலன்களை உயர்த்திப் பிடித்து "உன் செய்கைக்குத்தக்க பலனைக் கர்த்தர் உனக்குக் கட்டளையிடுவாராக." என்று பாராட்டுகிறார்.

## நிறைவாக

இன்றைக்கு நம்முடைய விசுவாச வாழ்விலும், நம்முடைய இன்றைய செயல்பாடுகளிலும் ஆண்டவருக்கு பிரியமாய் அவர் விரும்புகிற படி வாழ இந்த புதிய ஆண்டிலே அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக

ஆண்டவரின் அருட்பணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*




**மனுஷருடைய தப்பிதங்களை நீங்கள் அவர்களுக்கு மன்னித்தால், உங்கள் பரமபிதா உங்களுக்கும் மன்னிப்பார் – மத்தேயு 6:14**

## *There is healing in forgiveness*

மன்னிப்பு ஆசீர்வாதத்தின் தொடக்கம்.

நம் மன்னிப்பின் அளவுகோல் எவ்வளவு? எத்தனை தடவைதான் மன்னிப்பது? இது நம் அநேகர் அன்றாட வாழ்க்கையில் கேட்கிற கேள்வி. "ஏழுதரம் மாத்திரமல்ல, ஏழெழுபது தரம் மன்னிக்க வேண்டும்" என்று கர்த்தர் சொல்லுகிறார் (மத்தேயு 18:22). நாம் அடுத்தவரிடம் மன்னிப்பு கேட்கும் போது இருக்கும் மனத் தன்மை, அடுத்தவரை மன்னிக்கும் சூழ்நிலையில் இருக்கிறதா? நம் பாவங்கள் மன்னிக்கப்பட ஆண்டவர் இயேசு கிறிஸ்து தம்மையே ஜீவ பலியாய் ஒப்புக்கொடுத்தார். கிறிஸ்துவின் முன்மாதிரியாய் வாழ்கிற நாம் அடுத்தவர்களை மன்னிக்க அனுதினமும் முயல்வோமா? பாவ அறிக்கையை ஆலயத்தில் சொல்லிவிட்டு உண்மையாய் கடைபிடிப்போமா? நாம் மன்னிக்கும் போது சமாதானமாய் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்வோம். கர்த்தர் தாமே இந்த புதிய ஆண்டை மன்னிப்பின் ஆசீர்வாதத்தோடு நம் அனைவருக்கும் தந்தருள்வாராக.

ஆமென்.

ARTICLE BY

SIS. SEGENA LIVINGSTON

WOMEN'S Fellowship

# NEW YEAR, NEW THING

## புதிய வருடம் ,புதிய காரியம்

ஏசாயா:43:19

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதரர்களே, சகோதரிகளே உங்கள் அனைவருக்கும் இயேசு கிறிஸ்துவின் இனிதான நாமத்தில் என் அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கிறேன் கர்த்தர்தாமே இந்த வருடம் 2023 முழுவதும் நம்மோடு கூட இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக இந்த மாதத்தின் வாக்குதத்தம்.

**"புதிய வருடம், புதிய காரியத்தை செய்கிறேன்"**

**-ஏசாயா:43:19**

முன்தினவைகளை நினைக்க வேண்டாம் பூர்வமானவைகளை சிந்திக்க வேண்டாம். இதோ நான் புதிய காரியத்தை செய்கிறேன். நடந்து முடிந்த பழைய காரியங்களை நினைத்து கலங்க வேண்டாம். இந்த புதிய மாதத்தில் (வருடத்தில்) புதிய ஆசீர்வாதங்களைத் தருவார். இந்த புதிய வருடத்தில் கர்த்தர் எனக்கு என்ன நன்மைகளை செய்வார் என்று ஏக்கத்தோடு காத்து இருக்குற உங்ககளை பார்த்து கர்த்தர் சொல்லுகிறார் நான் புதிய காரியத்தை உன் வாழக்கையில் செய்வேன் என்று என்னுடைய வாழ்கையில் ஒரு முன்னேற்றம் இல்லையே ஒரு மாற்றம் இல்லையே என்று கலங்கவேண்டாம் பயப்படவேண்டாம் 2 கொரி :5:17 இவ்விதமாய் கர்த்தர் சொல்லுகிறார் பழையவைகள் எல்லாம் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின இந்த வருடத்தில் நடக்காத காரியம், நடக்கும் முடியாத காரியம் முடியும் ,வழியே இல்லாத இடத்தில் கர்த்தர் உங்களுக்காக புதிய வழியை உருவாக்குவார் வேதம் சொல்லுகிறது அந்தப்படி, முந்தின நடக்கைக்குரிய மோசம்போக்கும் இச்சைகளாலே கெட்டுப்போகிற பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு (எபேசியர் 4:22) பழைய மனுஷனை நீங்கள் களைந்துபோட்டு கர்த்தரால் உருவாக்கபட்ட புதிய ஆவி ஆவியுள்ளவர்களாய் ஒப்புக்கொடுக்கும்போது கர்த்தர் நம்மை ஆசீர்வதிக்க தயை பெருத்துவர் இந்த புதிய வருடத்தில் ஜீவன் உள்ளவர்களாய் நாம் வாழுவோம் கர்த்தர் நமக்காக வைத்து இருக்குறபுதிய பாதையில் நடப்போம் கர்த்தர் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

ஆமென்..,

**HAPPY NEW YEAR**

MEN'S FELLOWSHIP



# கொஞ்சத்திலே உண்மையுள்ளவன்

**“கொஞ்சத்திலே உண்மையுள்ளவன் அநேகத்திலும் உண்மையுள்ளவனாயிருக்கிறான், கொஞ்சத்திலே அநீதியுள்ளவன் அநேகத்திலும் அநீதியுள்ளவனாயிருக்கிறான்” (லூக்கா 16:10)**

நம்முடைய வாழ்க்கையில் தேவனுக்கு முன்பாக உண்மையாயிருக்கிற ஆண்டவர் நமக்குக் கிருபை செய்ய வேண்டும். மிகச் சிறியக் காரியத்திலும் அவருக்கு உண்மையாய் இருக்க ஆண்டவர் நமக்கு கிருபைச் செய்ய வேண்டும். தேவாதி தேவனுக்கு உண்மையாய் வாழுகிற வாழ்க்கையை நாம் கொண்டிருப்போமானால் அது எவ்வளவுப் பெரிய ஆசீர்வாதமான காரியம்!.

நம்முடைய இருதயத்தின் வாஞ்சையும் விருப்பதையும் அறிந்திருக்கிற கர்த்தர். சிறியக் காரியத்திலும் ஆண்டவருக்கு முன்பாக உண்மையாய் இருக்கும்பொழுது ஆண்டவர் அதைப் பார்க்கிறார். நம்முடைய வாழ்க்கையில் உண்மைத்தன்மையை தேவன் எதிர்பார்க்கிறார். நம்முடைய எல்லாக் காரியங்களிலும் நாம் ஆண்டவருக்கு உண்மையாய் இருக்க அவர் நமக்கு கிருபை செய்வாராக. நாம் பெலவீனர்கள் அறிவீனர்கள் என்பதை அறிந்திருக்கிறோம். ஆகவே நாம் நம்மைச் சார்ந்து அல்ல, ஆண்டவரே உமக்கு உண்மையுள்ளவனாய் இருக்க எனக்குக் கிருபை செய்யும் என்று அவருடைய சமூகத்தில் நம்மை ஒப்புக்கொடுக்கும்போது நிச்சயமாக தேவன் இவ்வித்மான ஆசீர்வாதமான வாழ்க்கையைக் கொடுப்பார். இந்த உலகத்தில் எல்லாவற்றிற்கும் மேலாக ஆண்டவருக்கு உண்மையுள்ளவர்களாக வாழுவதையே தெரிந்து கொள்ளுவோம். இந்த உலகம் அழிந்துப்போகக் கூடியது. இந்த உலகத்திற்காக நம்முடய பெலத்தை வீணாக்காமல், ஆவிக்குரிய நன்மைக்காக நம்முடைய காலங்களையும் நேரங்களையும் செலவழிக்க கர்த்தர் நமக்கு உதவிச் செய்யும்படியாக இரங்குவாராக.

YOUTH FELLOWSHIP

# DECEMBER

Congratulations

## KIDS COLOURING

Samuel Hebron

## CODE WORD

Sherin Shah

## WORD SEARCH

Sherin Shah

## CROSSWORD

Sherin Shah

WELL DONE!

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# GENESIS: 41-50

# ஆதியாகமம்: 41-50

JANUARY '23 - QUESTIONS

*1. யார்? யாரை நோக்கி எகிப்து தேசம் முழுவதும் உன்னை அதிகாரியாக்கினேன் என்று சொன்னது?*

*2. இஸ்ரவேலரின் குமாரர்கள் எங்கு யாருடன் போனார்கள்?*

*3. யோசேப்பு எங்கு அழுதார்?*

*4. யூதாவும் அவனுடைய சகோதரரும் எங்கே தரையிலே விழுந்தார்கள்?*

*5. யோசேப்பின் தம்பியின் பெயர் என்ன?*


*6. செபுலோனுடைய குமாரர் யார்?*

*7. யாக்கோபு எகிப்தில் எத்தனை வருடம் இருந்தார்?*

*8. யாக்கோபுற்கு கடவுள் எங்கு தரிசனமானார்?*

*9. ராணுவ கூட்டம் யார் மேல் பாய்ந்து விழும்?*

*10. யோசேப்பு எத்தனை ஆண்டு உயிருடன் இருந்தார்?*




## டிசம்பர் - 2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. ஆதி: 31:47 | 2. ஆதி: 32:31 | 3. ஆதி: 33:16 | 4. ஆதி: 34:4 | 5. ஆதி: 35:16
6. ஆதி: 36:12 | 7. ஆதி: 37:36 | 8. ஆதி: 38:13 | 9. ஆதி: 39:1 | 10. ஆதி: 40:10


**திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம்,**
**செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.
மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348


# KIDS COLOURING



PRIMARY

# JESUS GIVES THANKS

Guide Jesus to the mountaintop to pray.



# Giving Thanks

Enter his gates with thanksgiving and his courts with praise; give thanks to him and praise his name. Psalm 100:4

The puzzle is based on Psalm 100




| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| C | T | Y | A | E | E | G | G | E | F | W | S | O | Z | D |
| W | Q | K | V | B | O | F | H | A | N | E | N | V | G | S |
| Y | Q | O | X | Q | Y | P | O | G | T | D | A | G | C | F |
| W | L | K | Z | R | S | N | W | R | O | E | U | R | J | U |
| V | O | S | O | N | G | S | Q | V | E | T | S | R | T | W |
| O | U | R | F | E | I | X | E | U | U | V | H | N | E | H |
| Y | O | T | S | D | J | C | H | O | K | F | E | N | B | S |
| A | T | E | T | H | J | R | H | O | J | O | Y | R | H | W |
| Y | R | G | F | N | I | S | O | E | B | J | Y | H | Z | E |
| Z | L | O | N | R | O | P | S | E | Q | S | M | X | I | N |
| G | L | A | D | N | E | S | S | F | S | H | L | N | A | T |
| X | A | T | W | C | L | I | P | A | S | T | U | R | E | E |
| Q | U | U | H | Q | A | G | F | C | H | N | Y | L | R | R |
| D | A | P | I | R | H | M | V | I | Q | S | H | E | E | P |
| X | N | N | P | G | O | H | H | Z | T | H | A | N | K | S |

| | | | | |
|---|---|---|---|---|
| WORSHIP | EARTH | JOY | LOVE | ENTER |
| ENDURES | FOREVER | SHEEP | THANKS | SHOUT |
| SONGS | PASTURE | GLADNESS | GATES | PRAISE |

JUNIOR

# JESUS GIVES THANKS

## Matthew 11:25-30, John 6:10-13, John 11:40-44, Luke 22:17-19, and I Thessalonians 5:18




**Across**

**2.** Jesus was rejected by _______ leaders, people from His hometown, and even entire cities. He still showed thanks.

**5.** Jesus trusted in and was thankful for His Father's salvation plan. He submitted to His Father even to the point of _____ on the cross.

**7.** The more we ____ about God, the more we trust Him. This leads to thankfulness.

**8.** Give _____ in all circumstances; for this is the will of God in Christ Jesus for you.

**Down**

**1.** Jesus declared, "I thank you, Father, Lord of heaven and earth, that you have hidden these things from the wise and understanding and revealed them to little ______."

**3.** Even after _____ died, Jesus thanked His Father.

**4.** At the very last Passover supper with His disciples, He held up the cup that represented His blood, and the bread that represented His broken body, and He thanked His _____.

**6.** Jesus thanked His Father right before feeding more than 5,000 people with five loaves of bread and ___ fish.

SENIOR
& above

# January

## HAPPY BIRTHDAY

| | |
|---|---|
| 02-JAN | MS. JOSHIKA VASHNI D/O MR. KINGSLY STOOBERT |
| 02-JAN | MR. PREM JENIFER . A |
| 03-JAN | BABY. JOHANNAH D/O MR. SURESH BABU |
| 04-JAN | MRS. HELENA SANTHOSH |
| 07-JAN | BABY. DEVON CRASTILLON S/O MR. RAJESH CHELLADURAI |
| 08-JAN | MASTR. ROSHAN S/O MR. RAVINDRA |
| 12-JAN | MASTR.GEOVIN S/O MR .GEORGE ROSE |
| 16-JAN | MASTR. ABINESH SOLOMON S/O MR. R.ARULDHAS |
| 17-JAN | MASTR. KEVIN S/O MR.JOEL RANJITH KUMAR |
| 17-JAN | MR. ANTONY JESU RAJAN |
| 18-JAN | MR. JOHN JOSEPH |
| 19-JAN | MASTR. D.L.DERRIK S/O MR. DAVID LIVINGSTON |
| 20-JAN | MASTR. ABISHEK SOLOMON S/O MR. R ARULDHAS |
| 22-JAN | MRS. E. NANCY ANGELO |
| 22-JAN | MRS. DHILOMINA |
| 25-JAN | MRS. RAMYA MERGARATEE |
| 26-JAN | MS. DIVYA VENKATESAN |
| 27-JAN | MASTR. JONATHAN ASHER S/O MR.SURESH RAJAN |
| 28-JAN | MRS. SATHVIKALAKSHMI |
| 29-JAN | BABY. J.V.ACHSAH BERNICE D/O MR. D.JEYAKUMAR |

## Happy Anniversary

| | |
|---|---|
| 05-JAN | MR. JAYAN DHARMARAJ / MRS. HELEN HEMABAI |
| 08-JAN | MR. PAUL GNANA PRABU.R / MRS. NIRMALA JENIFER |
| 11-JAN | MR. BELFER JOHN SIGAMONY / MRS. JEYANTHA |
| 21-JAN | MR. C. HAVIN HEBA / MRS. JACKULIN MILKA |
| 23-JAN | MR. DAVID JOHNSON PREMKUMAR / MRS. PREMA RUTH.T |
| 29-JAN | MR.RAJAN PRABAKARN / MRS. J.AJEETHA RAJAN |
| 30-JAN | MR. SATHISH KUMAR.T / MRS. SINDUJA |

WISH YOU MANY MORE HAPPY RETURNS OF THE DAY

GOD BLESS YOU ALL




# How it Works







**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.












# Childrens Bible School

December 10, 2022












# Childrens Bible School

December 10, 2022



Kinder & Beginner Dance



Primary & Junior Dance



Intermediate & Senior



Childrens Bible School

December 10, 2022













# Christmas Family Service


CSI Tamil Parish Alain Choir In Abu Dhabi







# Christmas Tree Service

December 24, 2022

*The people who walked in darkness have seen a great light: Isaiah 9:2.*



# Happy New Year

*May this Christmas end the Present Year on a Cheerful note and make way for a fresh and bright New Year. Here's wishing you all a Happy New Year - 2023*



MS. B.N KARISS ANGELO

MRS NANCY ANGELO & REV. S.P BASKAR

EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

